பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

01 05 2025 **THURSDAY** 12 40 **PM**

ஆகாஷவாணி-செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வேவ்ஸ் உச்சிமாநாடு, இந்தியாவின் படைப்பாற்றல் திறனை உலகறியச் செய்யும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. இந்தியா – நார்வே நாடுகளுக்கு இடையேயான நட்புறவு வளர்ச்சிக்கான புதிய அத்தியாயத்தை எட்டியிருப்பதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

3. வடகிழக்கு மாநிலங்களை இந்தியாவின் வளர்ச்சி மண்டலமாக மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

4. மே தினத்தை ஒட்டி, சென்னையில் மே தின நினைவு சின்னத்தில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

5. **Bermuda** ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் **Veer Chotrani** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>><<<<<**

முதலில் வேவ்ஸ் உச்சிமாநாடு குறித்த செய்திகள்

(வேவ்ஸ் மாநாடு – மியூசிக் 11 செகண்ட்ஸ்)

வேவ்ஸ் உச்சிமாநாட்டினை பிரதமர் திரு நரேந்திர மோடி மும்பையில் இன்று தொடங்கி வைத்து உரையாற்றினார்.

இந்த உச்சிமாநாடு, இந்தியாவின் படைப்பாற்றல் திறனை உலகறியச் செய்யும் என்று அவர் கூறினார்.

வரும் காலங்களில் வேவ்ஸ் விருதுகள் வழங்கப்படும் என்று அவர் அறிவித்தார்.

இந்த விருது கலை மற்றும் படைப்பாற்றல் துறையில் சிறந்து விளங்குபவர்களை போற்றும் வகையில் அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் உள்ள மலை, குன்று, ஆறுகள், கிராமம் என ஒவ்வொன்றிலும் ஒரு கதை அடங்கியிருப்பதாகவும், இதனை கலைநயத்துடன் வெளிப்படுத்த இந்த மாநாடு வாய்ப்பாக அமையும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

அறிவாற்றல் மற்றும் படைப்புத் திறனை உலக அளவில் வெளிப்படுத்துவதற்கான அடித்தளமாக இந்த மாநாடு அமைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நான்கு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் 100 நாடுகளைச் சேர்ந்த திரைப்பட கலைஞர்கள், புதுமைப் படைப்பாளிகள், முதலீட்டாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் பங்கேற்றிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய படைப்புகளை இந்தியாவில் உருவாக்கவும், உலகிற்காக உருவாக்கவும் இதுவே சரியான தருணம் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

முன்னதாக, திரையுலக முன்னோடிகளான குருதத், பானுமதி, ராஜ்கோஷ்லா, ரித்விக் கட்டக், சலீல் சௌத்ரி ஆகியோரின் உருவம் பொறித்த தபால்தலைகளையும் திரு. நரேந்திர மோடி வெளியிட்டார்.

(வேவ்ஸ் மாநாடு – மியூசிக் 11 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

இந்தியா – நார்வே இடையேயான நட்புறவு, நம்பிக்கை மற்றும் வளர்ச்சிக்கான புதிய அத்தியாயத்தை எட்டியிருப்பதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

தமது நார்வே பயணம் குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்தப் பயணம் ஆக்கபூர்வமாக அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் முதலீட்டிற்கான வாய்ப்புகள் குறித்து நார்வே தொழில் துறையினரிடம் எடுத்துரைத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நார்வே நாட்டின் தலைவர்கள் மற்றும் தொழில் துறையினருடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

>>>>>><<<<<

வடகிழக்கு மாநிலங்களை இந்தியாவின் வளர்ச்சி மண்டலமாக மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு மாநிலங்களில் முதலீட்டை ஊக்குவிப்பது குறித்து மும்பையில் தொழில்துறையினருடன் ஆலோசனை மேற்கொண்ட அவர், நாட்டின் வளர்ச்சிக்கான புதிய இயந்திரமாக வடகிழக்கு மாநிலங்களை மாற்றுவதே அரசின் நோக்கம் என்றார்.

இந்த பிராந்தியத்தில் உள்ள எட்டு மாநிலங்களை ஒருங்கிணைத்து, வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இம்மாநிலங்களில் நீடித்த வளர்ச்சியை விரைவுபடுத்துவதில் அரசு மற்றும் தனியார் ஒத்துழைப்பு அவசியம் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

>>>>>><<<<<

பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவது உறுதி என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. **Marco Rubio-**வுடன் தாம் மேற்கொண்ட ஆலோசனையின் போது, பஹல்காம் தாக்குதல் குறித்து விவாதிக்கப்பட்டதாக அவர் தமது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மட்டுமின்றி, அவர்களுக்கு ஆதரவளிப்போர் மற்றும் சதி திட்டம் தீட்டிய அனைவரும் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

மஹகாராஷ்ட்ரா மற்றும் குஜராத் மாநிலங்கள் உருவான தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்ட தலைவர்கள் இம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவது என்ற மத்திய அரசின் முடிவு, சமூகநீதியை நிலைநாட்டுவதில் அரசின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுவதாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கை, சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதில் யாருக்கு உண்மையான அக்கறை உள்ளது என்பதை வெளிப்படுத்தியிருப்பதாக கூறினார்.

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதை ஜவஹர்லால் நேரு எதிர்த்து வந்ததாகவும் திரு. தர்மேந்திர பிரதான் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<

தொழிலாளர்களின் சிறப்பை போற்றும் ‘மே தினம்’ இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, தமிழகத்தில், சென்னை மே தின பூங்காவில் அமைந்துள்ள நினைவு சின்னத்தில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

பின்னர், மே தின உறுதிமொழியும் ஏற்கப்பட்டது.

நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர், போராடி பெற்ற அடிப்படை உரிமைகளை நினைவுகூர்ந்து முன்னேற்றப் பாதையில் செல்ல இந்நாளில் உறுதியேற்போம் என்று தெரிவித்தார்.

>>>>>><<<<<

தமிழக அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் வனஉரிமை சட்டம் குறித்த மாவட்ட அளவிலான பயிலரங்கம் தருமபுரியில் இன்று நடைபெறுகிறது.

இந்தப் பயிலரங்கில், வனப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினர் மற்றும் பிற இனத்தவர்களுக்கு வன உரிமை பட்டா வழங்குவது குறித்து அதிகாரிகள் விளக்கமளித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தண்டபாணி 54 செகண்ட்ஸ்)

**>>>>>><<<<<**

மும்பை தாக்குதல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள தகவூர் ராணாவிடம் குரல் மற்றும் கையெழுத்து மாதிரிகளை பதிவு செய்ய தேசிய புலனாய்வு முகமைக்கு தில்லி சிறப்பு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

அமெரிக்காவிலிருந்து கடந்த மாதம் 4ஆம் தேதி இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்ட தகவூர் ராணா-வின் காவல், வரும் 10ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில், தேசிய புலனாய்வு முகமையின் கோரிக்கையை ஏற்று, நீதிபதி திரு. **Chander Jit Singh** இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

**>>>>>><<<<<**

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையில், இந்தியாவிற்கு எகிப்து முழுஆதரவு தெரிவித்துள்ளது

தீவிரவாத ஒழிப்பு குறித்த இந்தியா – எகிப்து கூட்டு நடவடிக்கை குழுவின் நான்காவது கூட்டம், கெய்ரோவில் நேற்று நடைபெற்றது.

எகிப்துக்கான இந்தியா தூதர் திரு. **Dewal** மற்றும் இந்தியாவுக்கான எகிப்து தூதர் திரு. **Wallid Al - Fiqi** உள்ளிட்ட அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் குறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு இரு நாடுகளும் கடும் கண்டனம் தெரிவித்ததாக கூறப்பட்டுள்ளது.

அனைத்து வகையிலான தீவிரவாதத்தை எதிர்த்து போராடுவதில், இந்தியாவிற்கான ஆதரவை எகிப்து உறுதிப்படுத்தியுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

முப்படைகளின் ஒருங்கிணைந்த தளபதியாக விமானப்படைத் தளபதி ஏர்மார்ஷல் **Ashutosh Dixit** இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதையொட்டி, புதுதில்லியில் உள்ள ராணுவ தலைமையக வளாகத்தில் அவருக்கு முப்படைகளின் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

1986ஆம் ஆண்டு விமானப்படையில் சேர்ந்த ஏர்மார்ஷல் **Dixit**, பிரயாக்ராஜில் உள்ள விமானப்படையின் மத்திய படைப்பிரிவின் தளபதி உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார்.

>>>>>><<<<<

**Bermuda** ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் **Veer Chotrani** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், 11-9, 11-5, 11-3 என்ற செட்கணக்கில் அர்ஜென்டினாவின் **Leandro Romiglio-**வை வென்றார்.

>>>>>><<<<<

ஆசிய இளையோர் குத்துச்சண்டை போட்டியின் 17 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியா 4 தங்கம், 3 வெள்ளி, 11 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் **Ahanna Sharma, Jannat, Kushi Chand, Anshika** ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றனர்.

**Simranjeet Kaur** மற்றும் **Harshika** மகளிர் பிரிவிலும், **Devansh** ஆடவர் பிரிவிலும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

>>>>>><<<<<

சுதிர்மன் கோப்பை பேட்மிண்டன் போட்டியில், இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

>>>>>>END<<<<<